பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 03 திங்கட்கிழமை 17.03.2025 கதிர் 129

### இனி அது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நெருங்கிவரும்போது ரெலோவுக்குள் புதிய குழப்பம் ஏற்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது. இந்தக் குழப்பத்திற்குக் காரணமாக ☞2

### வடக்கு கிழக்கில்

# சகல உள்ளூராட்சி சபைகளையும் தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றும்

### அடித்துக்கூறுகிறார் சுமந்திரன்



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து சகல உள்ளூராட்சி சபைகளிலும் ஆட்சியைப் பிடிக்கும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

கட்சியின் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபை வேட்பாளர்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று கள்ளப்பாடு பகுதியில் இடம்பெற்றது. மாவட்டக் கிளைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவிகரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுமந்திரன் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி போட்டியிடுகின்ற உள்ளூராட்சித் தேர்தல் நியமனம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

சில இடங்களில் வேட்பாளர் நியமனங்களில் இருந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. எனவே மிகவிரைவாக வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வோம்.

அந்த வகையில் போட்டியிடுகின்ற அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி கைப்பற்றும் என்ற நம்பிக்கையிருக்கின்றது - என்றார்.

## மற்றைய கட்சிகள் சேர மறுத்ததால் தமிழ் அரசுக் கட்சி தனித்தே போட்டி

### தலைவர் சிவஞானம் கிளிநொச்சியில் தெரிவிப்பு



உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கான முயற்சிகளை புளொட், ஈபிஆர்எல்எவ் மற்றும் ரெலோ கட்சிகள் நிராகரித்துவிட்டதால் தமிழ் அரசுக் கட்சி அனைத்து சபைகளிலும் தனித்தே போட்டியிடுகின்றது என்று ☞8

## வேட்புமனு நிரப்புவதில் அதிக கவனம் தேவை

### நிராகரிக்கப்படாதிருப்பது அவசியம் என்கிறார் ரோஹன

உள்ளூராட்சி மன்ற தேர்லில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் சுயேச்சை குழுக்கள் தங்களின் வேட்புமனுக்களை நிரப்பும்போது அதிக கவனத்துடன் செயற்பட்டு அவை நிராகரிக்கப்படாமல் பார்த்-க்கொள்ளவேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு அதற்கெதிராக நீதிமன்றத்தை நாடினால் அந்தந்தச் சபைகளுக்கான தேர்தல் பாதிக்கப்படும் என்பதால் வேட்புமனுக்களை நிரப்புவதில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைகளும் அதிக கவனத்துடன் செயற்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். ☞2

## வடக்கின் கடற்றொழிலாளர் சமூகத்தை கருவறுத்து ஏப்பமிடுகிறது ஆளும்தரப்பு

### மீனவர் சங்க பிரதிநிதி அன்னராசா சீற்றம்

ஜனாதிபதி அநுரவின் ஆளும்தரப்பு, வடக்கின் கடற்றொழில் சமூகத்தை கருவறுத்து ஏப்பமிடும் செயற்பாட்டை முன்னெடுக்கின்றது என்று குற்றஞ்சாட்டுகிறார் வடக்கின் கடற்றொழிலாளர் அமைப்பு பிரதிநிதி அன்னராசா.

அவர் யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசியபோது இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்..

அநுர அரசு ஆட்சிக்கு வர முன்னர் நாட்டை ஊழலற்றதாக மற்றுவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தது. ஆனால் ஆட்சியைபிடித்தபின் தனதுநிலைப்பாடை முழுமையாக மாற்றிவிட்டது. இது வாக்களித்த வடக்கு மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இன்று வடக்கில் பாரம்பரிய சிறு கடற்றொழிலாளர்கள் பல்வேறு வகையில் தொடர்ந்தும் பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். கடலட்டைப் பண்ணைகளால் அவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டுள்ளது. அண்மையில் வடக்கு ஆளுநர் தலைமையில் கூட்டம் ஒன்றுநடைபெற்றுகடலட்டைப்பண்ணைகள் தொடர்பில் பல தீர்மனமானங்கள் எடுக்கப்படுள்ளன.

கடலட்டைப் பண்ணைகளை நாம் முறையான விஞ்ஞான ☞2

## இன்று பகல் 3 மணி நேரம் தாதியர் பணிப்புறக்கணிப்பு

அரச வைத்தியசாலைகளில் பணியாற்றும் தாதியர்கள் இன்று காலை 10 மணி முதல் மூன்று மணி நேர பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவு குறைப்பு தொடர்பில் அமைச்சர் தமக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாததற்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளனர் என்று அரச தாதியர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

தாதியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய வரவு செலவு திட்டத்தில் சுகாதார ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புக்கு இணையாக சலுகைகள் ☞2

### ஆளும்தரப்பு கட்டுப்படுத்த முடியாதளவுக்கு

## பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் தீவிரம்

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

ஒழுங்கமைக்கப்பட்ட பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் ஆளும்தரப்பால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குத் தீவிரமடைந்துள்ளன என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர்மேலும் தெரிவித்ததாவது: ☞2

## யாழ்ப்பாணத்தில் 17 சபைகளுக்கு 123 தரப்புக்கள் போட்டிக் களத்தில்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலில் போட்டியிடுவதற்காக 123 தரப்புக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைகுழுக்களால் இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

வேட்புமனுத் தாக்கல் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் இதுவரை யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு எழு தரப்புகளும், வல்வெட்டித்துறை நகர சபைக்கு எட்டு தரப்புகளும், பருத்தித்துறை நகர சபைக்கு எட்டு தரப்புகளும், சாவகச்சேரி நகரசபைக்கு எட்டு தரப்புகளும், காரைநகர் பிரதேச சபைக்கு எட்டு தரப்புகளும், ☞8

## தேசபந்துவோடு கைதாக இருந்த ஐவரின் கைதுக்குத் திடீர் தடை

### சிஐடிக்கு அறிவித்தார் சட்ட மா அதிபர்

வெலிகமதுப்பாக்கிச்சூட்டுசம்பவத்தில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுடன் கைது செய்யப்படவிருந்த தவிர்ந்த கொழும்பு குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட 5 பொலிஸாரையும் கைது செய்யாமல் அவர்களிடமிருந்து வாக்குமூலங்களை மட்டும் பெறும்படி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (சிஐடி) சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

2023ஆம் ஆண்டு டிசம்பர் 31 வெலிகம பொலிஸ் ☞2

## பட்டலந்த அறிக்கையை நிராகரித்தார் ரணில்

பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை தான் நிராகரிக்கிறார் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க நேற்று அறிக்கை மூலம் தெரிவித்தார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1987இல் இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஜேவிபியினர் நாடாளவிய ரீதியில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

அக்காலப்பகுதியில் மிக முக்கியமான பகுதிகளை பாதுகாக்கும் பொறுப்பை ஜனாதிபதி ஜேஆர் ☞2

## அப்பாவி மக்களை கொன்று குவித்த ஜேவிபிக்கும் தண்டனை வேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. வலியுறுத்து

கடந்த காலங்களில் ஜே.வி.பி. செய்த கொலைகளை மறைப்பதற்கு இடமளிக்கக்கூடாது. பட்டலந்தையில் குற்றமிழைத்தோருக்கு தண்டனை வழங்கப்படும் அதேவேளை, ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவித்த ஜே.வி.பி.யினருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா வலியுறுத்தினார்.

கம்பஹாவில் நேற்று இடம்பெற்ற ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

விவகாரம் முற்றிலுமாக வெளியே வந்தால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வாக்களிப்பு முற்றாகப் படுக்கும் என்று கூறப்படுகின்றது.

ரெலோவின் மத்திய குழு உறுப்பினரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் ரெலோ தலைவர், செயலாளர், உபதலைவர் ஆகியோருக்கு எழுதிய கடிதமே இந்தப் புதிய குழப்பத்திற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

அண்மையில் ரெலோ விந்தன் அந்தக் கட்சியைவிட்டு வெளியேறி தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்திருந்தார். அவரை கட்சியிலிருந்து இடைநிறுத்தும் தீர்மானத்தை வவுனியாவில் நடந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டம் எடுத்தது. கட்சித் தலைவருக்கும் நிதிச் செயலாளருக்கும் எதிராக நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் விந்தன் முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு விளக்கமளிக்கவேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் கேட்கப்பட்டது. விளக்கமளிப்பதற்கு இரண்டுவாரகால அவகாசம் கொடுக்கப்பட்டது. இந்தப் பிரச்சினையே விந்தன் கட்சியைவிட்டு வெளியேறக் காரணம். உண்மை என்னவென்றால் விந்தனை வெளியேற்ற திட்டமிட்ட காரணமே அது.

இதே மத்திய குழுக் கூட்டத்தில் ஒப்புக்குச் சப்பாணியாக, வினோ நோகராதலிங்கத்திடமும் விளக்கம் கேட்பது என்று தீர்மானிக்கப்பட்டது. 2024 ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்று அங்கிருந்தே ஓர் அறிக்கை விடுத்தார். அப்போது ரெலோ தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரான அரியநேந்திரனை ஆதரிப்பதாக வடக்கு கிழக்கில் நாடகமாடிக் கொண்டிருந்தது. பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் என்பதைப் போன்று ரணிலுக்கு உடல் , அரியநேந்திரனுக்கு உயிர் என்கி வகையில் நாடகமாடிக்கொண்டி-ருந்தது. இந்த நிலையில் வினோவின் பகிரங்கமான ரணில் ஆதரவு நிலைப்பாடு வெளியே ரெலோவின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்த மற்றைய கட்சிகளுக்கு உதவியாக இருந்தது.

வினோவின் ரணில் ஆதரவு நிலைப்பாடு குறித்தே ரெலோ மத்திய குழு அவரிடம் விளக்கம் கேட்டது. அதற்கு அந்தக் கூட்டத்திலேயே தான் பதிலளிக்கத் தயார் என்றும் ஆனால் அந்த விடயங்கள் ஊடகங்களுக்கு வெளியே வராது என்று உறுதி வழங்கவேண்டும் என்றும் வினோ கோரியிருந்தார். அதற்கு, சொல்லவேண்டாம் என்று தலைவரும் செயலாளரும் இணைந்து கூவி மறுத்துவிட்டார்கள். இங்கே விந்தன் இருக்கிறார் அவர் உடனடியாக ஊடகங்களுக்குத் தெரியப்படுத்திவிடுவார் என்று அதற்கு விளக்கமும் கூறியிருந்தார்கள். அந்த விளக்கத்தை வினோ எழுத்தில் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

இப்போது வினோவின் எழுத்துமூலமான விளக்கமே உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் விவகாரமாக மாறியுள்ளது என்று கேள்வி. வினோ தனது விளக்கத்தை கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் ஜனா கருணாகரன், துணைத் தலைவர் ஹென்றி மகேந்திரன் ஆகியோருக்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்று கூறப்படுகின்றது. அந்தக் கடிதத்தில் அவர் ரெலோ கட்சித் தலைமையிலிருந்து தன்னை யார் ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்துச் சென்றார் என்றும் ரணிலுக்கு ஆதரவாக பகிரங்க அறிக்கை விடுமாறு ஊக்குவித்தார் என்றும் எழுதியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. அதுமட்டுமன்றி அப்படி தன்னைக் கொண்டு அறிக்கை விடுத்ததன் மூலம் கோடிக்கணக்கில் தனக்குத் தெரியாமல் நிதி கைமாறப்பட்டுள்ளமை குறித்த குற்றச்சாட்டு ஒன்றையும் அவர் எழுப்பியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வினோவின் கடிதம் குறித்தும் அதிலுள்ள விடயங்கள் குறித்தும் கட்சி உறுப்பினர் களிடையே தகவல் கசிந்ததும் அதனை வெளியே வரவிடாமல் தடுப்பதில் கட்சிக்குள் சிலர் மும்முரமாகச் செயற்படுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. இதனால் அப்படியொரு விளக்கக் கடிதமே வினோவால் அனுப்பப்படவில்லை என்று தலைமையில் உள்ள உறுப்பினரில் ஒரு சிலரைக் கொண்டு அறிக்கை வெளியிடவும் அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன என்றும் சொல்லப்படுகின்றது.

கட்சிக்குள் கொதிக்கத் தொடங்கியிருக்கும் இந்த விவகாரம் அவர்களின் வட்ஸ்அப் குழுக்களில் காரசாரமான விவாதங்களையும் கிளப்பியுள்ளது. உள்ளூராட்சி தேர்தல் சமயத்தில் வினோவின் கடிதம் வெளியே வந்து, ஜனநாயகத் தேசியக் கூட்டணிக்கும் ஆப்படிக்குமோ என்கிற அச்சத்தில் கிடக்கின்றன ரெலோவின் பங்காளிக் கட்சிகள். அதனால் அந்தக் கடிதத்தை எப்படியாவது அமுக்கிவிடுவதற்காக, வினோ வெளிநாடு சென்றுவிட்டார், அவர் இப்போது கட்சியிலேயே இல்லை என்கிற கதைகளும் பரப்பப்படத் தொடங்கியுள்ளனவாம். சூம் மூலம் நடந்த மூன்று மத்திய குழுக் கூட்டங்களுக்கு வினோவிற்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. இதுபற்றி செயலாளரிடம் கேள்வி எ-ழுப்பப்பட்டதற்கு, தலைமைக்குழு வட்ஸ்அப் குழுவில் கூட்ட அறிவிப்பு விடுக்கப்பட்டது, அந்தக் குழுவில் வினோ இல்லை என்று எனக்குத் தெரியாது என்று பதிலளிக்கப்பட்டதாம்.

இப்போது தான் கடிதம் எழுதினாரா, அதில் என்ன எ-ழுதப்பட்டுள்ளது என்கிற விவரங்களை வினோதான் உறுதிப்படுத்தவேண்டும். கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர்கள் விடும் அறிக்கையை நம்புவதற்கு கட்சி உறுப்பினர்களே தயாராக இல்லை. அந்தக் கடிதம் கிடைத்தால் அதை வரிக்குவரி வெளியிட நானும் தயாராகவே உள்ளேன். இந்த விவகாரத்தை வைத்து ரெலோ தலைமையில் இப்போதுள்ளவர்களை அகற்றுவதிலே போட்டித் தரப்புக் கண்ணும் கருத்துமாகச் செயற்படும் நிலையில் தேர்தல் களத்தில் இந்தப் பிரச்சினை பூதாகாரமாக வெடிக்கும் என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது. யார் குற்றி அரியானால் என்ன, உண்மை என்ன என்பது மக்களுக்குத் தெரியவரத்தானே வேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியான ஆய்வுகளின் பின்பே வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம். இன்றைய ஆளும்தரப்பினர் தேர்தலுக்கு முன்னர் இதனை ஏற்றுக்கொண்டிருந்தனர். ஆனால் இன்றும் பண்ணைகளுக்காக காணிகள் அதிகாரிகளதும், அரசியல்வாதிகளதும் விருப்புக்கேற்ப வழங்கப்படுகின்றது. இதனால் சிறு கடற்றொழிலாளர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாம் வடக்கின் ஆளுநரிடம் கேட்கின்றோம் கடற்காணிகளை வழங்கும் அதிகாரத்தை உங்களுக்கு கொடுத்தது யார்? பதில் சொல்லுங்கள்.

கடலட்டைப் பண்ணைகளை அகற்றினால் நாட்டின் வருவாய் குறையும் என்று ஆளுநர் காரணம் வேறு கூறியுள்ளார். அவ்வாறாயின் சிறு கடற்றொழில் செய்துவரும் தொழிலாளர்களின் நிலை என்ன? அவர்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் கொடுப்பது யார்? கடல் மீது உள்ள அக்கறையின் பால்தான் இந்தக் கேள்வியைக் கேட்கின்றோம்.

கடலட்டைப் பண்ணைகளுக்குத் தொடர்ந்தும் சட்டவிரோதமாக அனுமதி வழங்குவதை நிறுத்தாவிடின் நாம் தொழில் நடவடிக்கையை கைவிடும் நிலைக்குத் தள்ளப்படுவோம். எனவே வடக்கின் கடற்றொழில் சமூகத்தைக் கருவறுத்து ஏப்பமிடும் செயற்பாட்டை முன்னெடுப்பதை அநுர அரசும் வடக்கின் ஆளுநரும் கைவிட வேண்டும் - என்றார்.

இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படுவது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோது, - சட்டவிரோத செயற்பாட்டை இந்தியத் தரப்பினர் கைவிட வேண்டும் என்றார்.

"கச்சதீவு திருவிழா என்பது சமய ரீதியான ஒன்று. அதன் மூலம் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது'' எனவும் அவர் தெரிவித்தார்.

## பாதாளக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் திணைக்களம் முழுமையாக அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிபலனாகவே பொலிஸ் திணைக்களத்துக்கும், பதில் பொலிஸ் மா அதிபருக்கும் இடையில் முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

இந்த முரண்பாடுகள் பொலிஸ் ஆணைக்குழு வரை தொடர்கிறது. இதனால் முழு பாதுகாப்புக் கட்டமைப்பும் பலவீனமடைந்துள்ளது. நாட்டில் சட்டம் என்பதொன்று கிடையாது என்று ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள குழுக்கள் கருதுகின்றன.

தமக்கு இணக்கமானவரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நியமிக்கும் அளவுக்கு பொலிஸ் சேவை இன்று அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் சேவை மாத்திரமல்ல, பாதுகாப்பு சேவை உட்பட புலனாய்வுப் பிரிவும் இன்று அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் சேவை உட்பட பாதுகாப்பு சேவைகள் இன்று அரசியல்மயப்ப டுத்தப்பட்டுள்ளதால் சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்துள்ளது. பொலிஸ் மா அதிபரை கைது செய்வதற்கு பொலிஸார் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளனர். இது உலக நகைச்சுவையாகும்.

தேசபந்து தென்னகோனை பொலிஸார் கைது செய்யமாட்டார்கள். உயர்நீதிமன்றத்தின் ஊடாக பிணை பெற்றுக்கொள்வதற்கு தேசபந்துக்கு சாதகமான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. அதுவரையில் அவர் கைது செய்யப்படமாட்டார் - என்றார்.

## வேட்புமனு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வேட்புமனுகள் இன்று முதல் ஏற்றுக்கொள்ளப்பட இருக்கும் நிலையில் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் 17 ஆம் திகதி முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை இடம்பெற இருக்கிறது. தேர்தலில் போட்டியிட இருக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் தங்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும் விடயங்கள் தொடர்பில் அதிக வகனம் செலுத்த வேண்டும்.

பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான ஒதுக்கீட்டை வழங்காமல் இருப்பது, பிறப்புச்சான்றிதழ் வழங்காமல் இருப்பது, பெண்கள் என்பதை உறுதிப்படுப் படுத்துவதற்கான சத்தியக் கடதாசிகள் போன்ற ஆவணங்களை வழங்காதிருப்பது போன்ற காரணங்களால் கடந்த காலங்களில் அதிகமான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த தடவை 162 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதற்கெதிராகப் பல வழக்குகளும் தொடுக்கப்பட்டிருந்தன. அதனால் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ளவதில் கவனமாக இருக்கவேண்டும்.

வேட்புமனு தாக்கல் செய்யும்போது வேட்பாளர்கள் தங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையையும் சமர்ப்பிக்கவேண்டி இருக்கிறது.

வேட்பாளர்கள் தங்களின் முகப்புத்தகத்தில் அல்லது இணையத்தளத்தில் இதனை பதிவேற்ற முடியும். வேட்பாளர்கள் தங்களின் தூய்மையான அரசியலை உறுதிப்படுத்த தங்களின் சொத்துக்கள் பொறுப்புக்கள் அறிக்கையை பெப்ரல் சுயாதீன தேர்தல்கள் கண்காணிப்பு குழுவிடம் கையளிப்பதாக இருந்தால் அதனைப் பெற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்..

அத்துடன் தேர்தல் செலவு சட்டம் இந்த தேர்தலின்போதும் அமுல்படுத்தப்படும். வேட்பாளர்கள் தங்கள் செலவுகளை நாளாந்தம் பதிவு செய்துகொள்வதன் மூலம் அந்த அறிக்கையை தேர்தல் நிறைவடைந்து 21 நாட்களுக்குள் இலகுவாகக் கையளிக்கலாம்.

வேட்பாளர்கள் யாராவது செலவு அறிக்கையைக் கையளிக்கத் தவறினால் அவர்களுக்கு 3 வருட சிறைத் தண்டனை விதிக்கப்படலாம், அதேநேரம் அவர்கள் எதிர்வரும் 5 வருடங்களுக்கு தேர்தலில் போட்டியிட முடியாமல் போகலாம். அதனால் இது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அனைத்து வேட்பாளர்களையும் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

## இன்று பகல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளது. தர உயர்வுகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு உரிய தீர்வினைப் பெற்றுத்தருமாறு ஆளும்தரப்பிடம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் இதுவரை எவ்வித தீர்வுகளும் வழங்கப்பட வில்லை.

சுகாதார அமைச்சர் பேச்சுக்களின்போது எமக்களித்த வாக்குறுதியையும் நிறைவேற் றவில்லை. சுகாதார அமைச்சருடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைவாகவே மார்ச் 6 தாதியர்களால் முன்னெடுக்கப்பட இருந்த தொழிற்சங்க நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது. எனினும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ எமக்களித்த வாக்குறுதியை மறந்துவிட்டார்.

ஆகையால் ஒத்திவைக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை மீள ஆரம்பிப்பதை தவிர வேறுவழியில்லை. ஒருபுறம் அடிப்படை சம்பள உயர்வை காண்பித்து மறுபுறம் கொடுப்பனவுத் தொகையை குறைத்துள்ளனர். இதனால் சுகாதார ஊழியர்கள் பெற்றுவந்த முழு சம்பளத் தொகையையும் இந்த ஆளும்தரப்புக் குறைத்துள்ளது. கனிஷ்ட தாதி ஒருவரின் ஏப்ரல் மாத சம்பளம், மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் 600 ரூபாவால் குறைந்துள்ளது. இது எப்படி நியாயமான தீர்வாக இருக்க முடியும்.

ஆகையால் ஆளும்தரப்பின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் திங்கட்கிழமை (இன்று) நாடளாவிய ரீதியில் சகல அரசவைத்தியசாலைகளிலும் அரச தாதியர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் தாதியர்கள் காலை 10.00 மணி தொடக்கம் நண்பகல் 1.00 மணி வரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

## தேசபந்துவோடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவிற்குட்பட்ட ஹோட்டல் ஒன்றின் அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட 6 பொலிஸ் அதிகாரிகளை சந்தேகநபர்களாகக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

சட்டமா அதிபர் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு அறிவித்ததன் பின்னர், சந்தேக நபர்களைக் கைது நீதிமன்றம் செய்யுமாறே நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவின் பிரதியொன்று குற்றப் புலனாய்வுதிணைக்களத்திற்கு வழங்கப்பட்டது.

மாத்தறை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இடைநிறுத்தக் கோரி தேசபந்து தென்னகோன் உட்பட 6 சந்தேகநபர்களும் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர். அதனை விசாரித்த நீதிமன்றம் தனது முடிவை இன்று அறிவிக்கவுள்ளது.

இந்நிலையில், சட்டமா அதிபருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுதாரர்களின் சட்டத்தரணிகளுக்கும் இடையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், ஆரம்ப விசாரணைகள் முடியும்வரை முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தவிர்ந்த கொழும்பு குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட 5 சந்தேகநபர்களையும் கைதுசெய்ய வேண்டாம் எனவும், அவர்களைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைத்து வாக்குமூலங்களைப் பதிவு செய்யுமாறும் சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

## பட்டலந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயவர்த்தன அமைச்சர்களிடம் ஒப்படைத்தார்.

பியகம பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் சுதந்திர வர்த்தக வலயம் உட்பட பொருளாதார ரீதியில் முக்கியமான பல கட்டமைப்புகள் காணப்பட்டன.

இந்தப் பகுதிகளை பாதுகாப்பதற்காக இராணுவத்தை பயன்படுத்தினார்கள்.

பாதுகாப்பு படையினரை அந்தப் பகுதியில் உள்வாங்குவதற்காக கைவிடப்பட்ட கட்டடங்கள், இலங்கை உரஉற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கைவிடப்பட்ட வீடுகள் என்பவற்றைப் பாதுகாப்பு படையினரின் பயன்பாட்டுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அக்காலப் பகுதியில் இலங்கை மின்சார சபையின் பல ஊழியர்கள் அந்த வீடுகளில் வசித்து வந்தனர்.

இந்தப் பயங்கரமான காலப்பகுதியில் சப்புகஸ்கந்த பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. அதன் பொறுப்பதிகாரி கொல்லப்பட்டார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண என்னைத் தொடர்புகொண்டு எவரும் வசிக்காத நிலையில் உள்ள வீடுகளைப் பாதுகாப்புப்படையினருக்கும் பொலிஸாருக்கும் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அந்த வீடுகளின் நிர்வாகி களனி பொலிஸ் பிரிவின் தலைமை அதிகாரி நளின் தெல்கொட விடம் அந்த வீடுகளை கையளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தார்.

அதிகாரத்திலிருந்த ஆளும்தரப்பு

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

# வருடம் முழுவதும் மகளிர் தினம் கொண்டாடப்படுதல் வேண்டும்

## கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

மகளிர் தினத்தைக் கொண்டாடுவதற்கு ஒரு நாள் போதாது அவர்களைச் சிறப்பிப்பதாயின் வருடம் முழுவதும் சர்வதேச மகளிர் தினத்தை அனுஷ்டித்து அவர்களை மகிமைப்படுத்த வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர தெரிவித்தார்.

'நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக வலுவான பெண் வழித்தடமாக இருப்பாள்' எனும் இவ்வருட தொனிப்பொருளில் அமைந்த சர்வதேச மகளிர் தின நிகழ்வு திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் வீ எபெக்ற் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் முழுமையான அமுலாக்கத்துடன் சனிக்கிழமை இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர -

தாயாக, சகோதரியாக, மனைவியாக என பல பாத்திரங்களில் இந்த உலகை உயிர்ப்பூட்டும் பெண்களை தினமும் கண்ணியப்படுத்துவதுதான் சரியாக இருக்கும். பெண்களுக்கு உள்ள வளங்கள், அவர்கள் அனுபவிக்கும் வசதி வாய்ப்புக்கள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன.

பெண்களுக்கு உயர் கண்ணியத்தையும், மதிப்பு, மரியாதையும் வழங்க வேண்டும் என்றால் அதனை நாங்கள் எமது வீட்டிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும்.

பின்னர் அது வியாபித்து பாடசாலை, பணியிடம்,



பள்ளிவாசல், பன்சலை, கோவில், விகாரை, தேவாலயம் என்று அவைகளும் பெண்களைக் கண்ணியப்படுத்தும் இடங்களாக மாற வேண்டும். இதனைத் காலம் தாழ்த்தாது அமுல் படுத்த வேண்டும்.

இன்று இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திலும் பெண்களின் கல்வித் தரம், அவர்களது நிபுணத்துவ மனித வளம் மேம்பட்டிருக்கிறது.

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் சகல பீடங்களிலும் கற்கின்ற மாணவிகளின் எண்ணிக்கை மெச்சிப் பேசுமளவிற்கு அதிகரித்திருக்கிறது. நாட்டின் சனத்தொகையிலும் பெண்கள் 52 வீதம் உள்ளார்கள்.

முன்னர் நாங்கள் இலங்கைக்கு வருமானத்தை ஈட்டித் தருவது தேயிலை, றப்பர், கோப்பி என்றுதான் சொன்னோம். ஆனால் அந்த நிலைமை மாறி இப்பொழுது நாட்டிற்று டொலர் அந்நியச் செலவாணியை ஈட்டித் தருவது நம் நாட்டுப்



பெண்களே என்றாகியிருக்கிறது.

இவ்வாறு பெண்கள் எல்லா வகையிலும் தமது அர்ப்பணிப்பைச் செய்து வருகிறார்கள். நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு அவர்களே. எனவே அத்தகைய அர்ப்பணிப்பாளர்களை கௌரவிப்பதில் வருடத்தில் ஒரு நாள் போதாது. - என்றார்.

திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், பிரதேச செயலாளர்கள், திருகோணமலை பொலிஸ் பெண்கள் சிறுவர் பிரிவினர், திருகோணமலை மாவட்ட, பிரதேச செயலகங்களின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், இன்னும் பல அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், யுவதிகள் சமூக மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அலுவலர்கள் உட்பட இன்னும் பலர் இந்நிகழ்வில் பங்கு பற்றினர்.

# பெண்கள், சிறுவர் குறித்த பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு

(ஹஸ்பர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் சிறுவர் அபிவிருத்தி பிரிவுகளிலும் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வொன்று சனிக்கிழமை இடம்பெற்றது.

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்ற குறித்த நிகழ்வை திருகோணமலையில் இயங்கி வரும் ஈவின்ங்ஸ் பெண்களுக்கான சுதந்திர அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இதில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 07 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பும் இடம் பெற்றிருந்தது.

மேற்படி செயலமர்வுக்கு வளவாளராக மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தீபானி கலந்து சிறப்பித்தார்.

பெண்கள் சிறுவர்கள் உரிமைகள் பாலியல் வன்முறைச் சம்பவங்களின் போதான நிலமையின் போது செயற்படும் விதம் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கான வழி முறைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் குறித்த செயலமர்வின் போது கலந்துரையாடப்பட்டன.

இதில் குறித்த ஈவின்ங்ஸ் பெண்களுக்கான சுதந்திர அமைப்பின் தலைவி திருமதி காயத்திரி நளினகாந்தன், பெண் பொலிஸ் துறை சார் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சம்மாந்துறை இருட்டு வட்டம் அமைப்பினால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைப்பு

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந் துறை பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற தெரிவுசெய்யப்பட்ட சுமார் 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சம்மாந்துறையில் நடைபெற்றது.

சம்மாந்துறைஇருட்டுவட்டம்அமைப்பின் தலைவர் சட்டமுதுமானி எம்.ஏ.எம்.லாபீர் தலைமையில் சம்மாந்துறையில் பல்வேறு பகுதிகளில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

குறித்த அமைப்பானது கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சமூக சேவைகள் மற்றும் பல்வேறு உதவித்திட்டங்களை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது அமைப்பின் உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கையில் 'எங்கள் அமைப்பானது எவ்வித அரசியல் எண்ணங்களும் இல்லாமல் ஓர் சமூக சேவையாக காணப்படுகிறது, அமைப்பின் விசேட அம்சமாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் போது புகைப்படம் எடுக்கப்பட்ட மாட்டாது, அனைத்து உலர் உணவுப் பொருள்;களும் அமைப்பு உறுப்பினர்களின் சொந்த நிதி ' போன்ற பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், சம்மாந்துறை இருட்டு வட்டம் அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசியாளர்கள் தவறுகளால் மக்களின் வாக்களிக்கும் உரிமையை தடுக்காதீர்

உள்ளூராட்சி மன்ற தேர்லில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் சுயேச்சை குழுக்கள் தங்களின் வேட்புமனுக்களை நிரப்பும்போது அதிக கவனத்துடன் செயற்பட்டு அவை நிராகரிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி கேட்டுக்கொண்டுள்ளார்.

வேட்புமனுக்கள்நிராகரிக்கப்பட்டுஅதற்கெதிராகநீதிமன்றத்தை நாடினால் அந்தந்தச் சபைகளுக்கான தேர்தல் பாதிக்கப்படும் என்பதால் வேட்புமனுக்களை நிரப்புவதில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைகளும் அதிக கவனத்துடன் செயற்படவேண்டியது அவசியம்.

உள்ளூராட்சிமன்றதேர்தலுக்கானவேட்புமனுகள்இன்றுமுதல் ஏற்றுக்கொள்ளப்பட இருக்கும் நிலையில் இந்த முக்கியமான கருத்தை அவர் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு தேர்தலின்போதும் அரசியலாளர்கள் வேட்பு மனுக்களை நிரப்புவதிலும் தாக்கல் செய்வதிலும் விடும் தவறுகளால் பல சபைகளின் தேர்தல்கள் நிறுத்தப்படுவதை அல்லது தாமதமாவதைக் காண்கின்றோம். 2023இல் அழைப்பு விடுக்கப்பட்ட தேர்தலில்கூட வடக்கு கிழக்கு மாகாணங்களில் மன்னார், பூநகரி, தெஹியத்தகண்டி ஆகிய மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களுக்கு நீதிமன்றம் தடை விதித்திருந்தது.

2024இல் இந்தத் தேர்தலுக்கான மீள் அறிவித்தல் விடுக்கப்பட்டபோது நீதிமன்றத் தடை காரணமாக தேர்தல்கள் ஆணைக்குழு இந்த மூன்று சபைகளுக்கும் தேர்தலை அறிவிக்காமலேயே விட்டது. அதன் பின்னர் இந்தச் சபைகளின் வேட்புமனுக்கள் தொடர்பில் வழக்குகளைத் தாக்கல் செய்த தரப்புக்கள் தமது மனுக்களை மீளக் கைவாங்குவதாக நீதிமன்றத்திற்கு அறிவித்த பின்னரே அவற்றுக்கும் தேர்தலை அறிவித்தது ஆணைக்குழு. இது போன்று இலங்கை முழுவதும் 162 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன என்றும் அவற்றில் பலவற்றுக்கு எதிராக வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன என்றும் ரோகன ஹெட்டியாராச்சி தெரிவித்திருக்கிறார்.

''பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான ஒதுக்கீட்டை வழங்காமல் இருப்பது, பிறப்புச்சான்றிதழ் வழங்காமல் இருப்பது, பெண்கள் என்பதை உறுதிப்படுப்படுத்துவதற்கான சத்தியக் கடதாசிகள் போன்ற ஆவணங்களை வழங்காதிருப்பது போன்ற காரணங்களால் கடந்த காலங்களில் அதிகமான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த தடவை 162 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதற்கெதிராகப்பலவழக்குகளும்தொடுக்கப்பட்டிருந்தன. அதனால் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ளவதில் கவனமாக இருக்கவேண்டும்'' என்கிறார் அவர்.

இப்படி ஒவ்வொரு தேர்தலின்போதும் பல சபைகளில் அரசியலாளர்கள் விடும் தவறுகள் மக்களின் வாக்களிக்கும் உரிமையைக்குத் தடையாக வந்தமைகின்றன. வேட்புமனுக்களை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் தெளிவாக ஆணைக்குழுவால் விடுக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தெரிந்து தெளிந்து, முறையான வல்லுநர்களின் துணையோடு அவற்றை நிரப்புவதன் மூலம் இத்தகைய தவறுகளைத் தடுத்து நிறுத்தலாம்.

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும்போதும் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாததன் மூலம் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையையும் கடந்த காலங்களில் பார்த்திருக்கின்றோம். நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட அரசியல் கட்சிக்கள்கூட இந்தத் தவறைச் செய்துள்ளன என்பது கடந்தகால வரலாறு. இதுபோன்ற தவறுகளையும் தவிர்த்துக்கொள்வதில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் 17 ஆம் திகதி முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை இடம்பெற இருக்கிறது. தேர்தலில் போட்டியிட இருக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் தங்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும் விடயங்கள் தொடர்பில் அதிக வகனம் செலுத்த வேண்டும்.




### கூர்ஸ்க் போர்க்கள வரலாற்று படிப்பினை

## உக்ரைனில் போர் நிறுத்தம் சாத்தியமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கூர்ஸ்க் போர் நடவடிக்கையிலிருந்து உக்ரைன் பெற்ற ஆரம்பகால வெற்றிகள் அனைத்தையும் தற்போது இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

உக்ரைனிய வீரர்கள் சுற்றி வளைக்கப் பட்டாலோ அல்லது கடுமையானதுப்பாக்கிச் சூட்டின் கீழ் பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலோ அது பெரும் உயிரிழப்புகளைச் சந்திக்க நேரிடும்.

இரண்டாம் உலகப் போரில் சோவியத்படைகள், நாஜி ஜேர்மனியின் படைகளை தீர்க்கமாக தோற்கடித்த போரே கூர்ஸ்க் (Kursk) போராகும். இதே களத்தில் தற்போது நேட்டோ ஆதிக்க விஸ்தரிப்பை எதிர்த்து நிற்கும் ரஷ்யா, உக்ரைன்படைகளைசரணடைய வைத்துள்ளது.

### கூர்ஸ்க்கில் பின்வாங்கும் உக்ரைன்:

கடந்த சில வாரங்களாக கூர்ஸ்கில் ஏற்பட்ட தோல்வி, தொடர்ச்சியான பலத்தஅடிகளுக்குப்பிறகுஜெலென்ஸ்கி அரசின் மீதான போர் நிறுத்த அழுத்தத்தை தீவிரப்படுத்தி உள்ளது.

களநிலவரப்படி ரஷ்யாவின் கூர்ஸ்க் போர்க்கள பகுதியில் உக்ரேனியப் படைகள் கடுமையான பின்னடைவை சந்தித்து உள்ளன. அங்கு அவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் கைப்பற்றி ஏழு மாதங்களுக்கும் மேலாக கடுமையான சண்டையில் அதை ஓரளவு தக்க வைத்துக் கொண்டனர்.

கூர்ஸ்க் பிராந்தியம் (Kursk) உக்ரைனின் சுமி பகுதியை எல்லையாகக் கொண்ட மேற்கு ரஷ்யாவின் ஒரு பகுதியாகும். கடந்த ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் தேதி, உக்ரைன் துருப்புக்கள் ரஷ்ய எல்லையைத் தாண்டிச் சென்று 1,376 சதுர கிமீ (530 சதுர மைல்) பரப்பளவு கொண்ட ஒரு பகுதியைக் கைப்பற்றியது.



இதுவே உக்ரேனிய போரின் மிகப்பெரிய ஆச்சரியமிக்க அதிரடியாக ஒன்றாக உருவெடுத்தது. அதன் பிறகு சுமார் 100 நகரங்கள் மற்றும் கிராமங்களை உள்ளடக்கிய பிராந்தியத்தை உக்ரைன் கைப்பற்றியது.

தற்போது ரஷ்யப் படைகள் அந்த நிலத்தின் பெரும்பகுதியை மீண்டும் கைப்பற்றியுள்ளன. மாஸ்கோ ஆதரவு போர் வலைப்பதிவர்கள் உக்ரேனிய துருப்புக்கள் சுற்றி வளைக்கப்படும் அபாயத்தில் இருப்பதாகக் கூறுவதை உக்ரைனிய உயர்மட்டத் தளபதிகள் மறுத்துள்ளனர்.




### உக்ரைனுக்கு கூர்ஸ்க்கின் முக்கியம்:

ரஷ்யா உக்ரைனில் கைப்பற்றிய நான்கு பிராந்தியங்களை விடுவிக்க பேரம் பேசும் அளவுக்கு கூர்ஸ்க் இருந்தது.

இந்த நடவடிக்கை 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து உக்ரைனுக்கு அதன் மிகப்பெரிய வெற்றியை வழங்கியது எனலாம்.

அத்துடன்ரஷ்யாவைஎதிர்கொள்ளும்ஒரு பெரியமனஉறுதியைஉக்ரைனுக்குஅளித்தது. ரஷ்யாவின் பாரிய படையெடுப்பைத் தடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, உக்ரைன் அதன் சொந்த படையெடுப்பின் மூலம் அதன் எதிரியை திகைக்க வைத்தது.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# உக்ரைனில்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

உக்ரைன்ஜனாதிபதிவோலோடிமிர்ஜெலென்ஸ்கி நீதியை மீட்டெடுப்பதுடன், இப்போரை சாதாரண ரஷ்யர்களிடம் கொண்டு வருவது எனவும் நம்பிக்கை தெரிவித்தார். கூர்ஸ்க் கைப்பற்றல்

நடவடிக்கை கிழக்கு உக்ரைனில் ரஷ்யாவின் முன்னேற்றங்களை மெதுவாக்கும் என்றும் உக்ரைன் நம்பியது.

கூர்ஸ்க்கின் பாதுகாப்பிற்கு ரஷ்யா துருப்புக்களை திசைதிருப்ப கட்டாயப்படுத்தியது. ஆனால் இது நடக்கவில்லை என்றாலும், கிழக்கில் ரஷ்யாவின் வெற்றிகள் மட்டுப்படுத்தப்பட்டன.

இறுதியாக, ஜெலென்ஸ்கி கூர்ஸ்க்கை ஒரு பேரம் பேசும் பொருளாகக் கருதினார். கடந்த மாதம் ரஷ்ய கட்டுப்பாட்டின் கீழ் உக்ரேனிய பிரதேசத்திற்கு வர்த்தகம் செய்யப்படலாம் என்றும் அவர் கூறினார்.



கடந்த பெப்ரவரி 28 அன்று டிரம்புடனான அவரது பேரழிவுகரமான வெள்ளை மாளிகை சந்திப்பு நடைபெற்றது. தற்போது சாத்தியமான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அவரது கையை பலவீனப்படுத்தும் வகையில் கூர்ஸ்க் தோல்வி அமையவுள்ளது.

## உக்ரைனின் ஊடுருவல் :

கடந்த வருடம் ஆகஸ்ட் 6, 2024 அன்று, உக்ரைனின் ஆயுதப் படைகள் ரஷ்யாவின் கூர்ஸ்க் பகுதியில் ஊடுருவி, ரஷ்ய ஆயுதப் படைகள் மற்றும் ரஷ்ய எல்லைக் காவல்படையினருடன் மோதின. ரஷ்யாவின் கூற்றுப்படி, டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களின் ஆதரவுடன் முதல் நாளில் குறைந்தது 1,000 உக்ரைனிய துருப்புக்கள் எல்லையைக் கடந்தன என்று கூறப்படுகிறது.

அதன் பிறகு கூர்ஸ்க் பகுதியில் அவசரநிலை அறிவிக்கப்பட்டது. மேலும் ரஷ்ய படைகள் அந்துப் பகுதிக்கு விரைந்த போதும் உடனடியாக உக்ரைனிய படையினரை வெளியேற்ற முடியவில்லை.

ஆகஸ்ட் 10 அன்று, கூர்ஸ்க், பெல்கோரோட் மற்றும் பிரையன்ஸ்க் பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை ரஷ்ய அதிகாரிகள் தொடங்கினர்.

ஆயினும்முதல்வாரஇறுதியில்,உக்ரைன்இராணுவம் 1,000 கிமீ (390 சதுர மைல்) ரஷ்ய பிரதேசத்தைக் கைப்பற்றியதாகக் கூறியது. அதே நேரத்தில் உக்ரைன் படைகள் சில குடியிருப்புகளைக் கைப்பற்றியதாக ரஷ்ய அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர்.

பின்னர் ஆகஸ்ட் 15 அன்று உக்ரைன் தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திற்கு ஒரு இராணுவ நிர்வாகத்தை நிறுவியது. அக்டோபர் தொடக்கத்தில் உக்ரைனின் முன்னேற்றம் நின்றுவிட்டது. ஆனால் அக்டோபர் மற்றும் நவம்பர் முதல் பாதியில், ரஷ்யாவின் தாக்குதலின் போது உக்ரைன் ஆக்கிரமித்துள்ள பிரதேசத்தில் பாதியை ரஷ்யப் படைகள் மீட்டெடுத்தன.

அண்மையில் மார்ச் 11, 2025 அன்று, ரஷ்ய மற்றும் வட கொரியப் படைகளின் எதிர் தாக்குதலின் விளைவாக பெரும்பாலான உக்ரைனியப் படைகள் கூர்ஸ்க் நகரில் இருந்து பின்வாங்கி வெளியேறி வருகின்றன.

## 2ஆம் உலகப் போரில் கூர்ஸ்க் போர்க்களம்:

இரண்டாம் உலகப் போரில் சோவியத் படைகள், அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்துடன் கூட்டு சேர்ந்து, நாஜி ஜேர்மனியின் படைகளை தீர்க்கமாக தோற்கடித்த போரே கூர்ஸ்க் (லுற்ஷவிவ) போராகும்.

கூர்ஸ்க் டாங்கி போர் (Battle of Kursk) என்பது 1943 கோடையில் தென்மேற்கு ரஷ்யாவில் நாஜி ஜெர்மனி யுடன்- சோவியத் யூனியனின் படைகளுக்கு இடையேயான இரண்டாம் உலகப் போரின் கிழக்கு முன்னணிப் போராகும்.

இதன் இறுதி விளைவாக சோவியத்க்கு வெற்றி கிடைத்தது. கூர்ஸ்க் போர் என்பது போர் வரலாற்றில் மிகப்பெரிய (Battle of Tanks) டாங்கிப் போராகும். இப்போருக்கு முன்னர் நடந்த ஸ்டாலின்கிராட் போருடன், ஐரோப்பியப் போரின் அரங்கில் குறிப்பிடப்பட்ட இரண்டு திருப்புமுனைகள் ஏற்பட்டன.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போர்க்களமே தற்போது ரஷ்யாவும் உக்ரைனும் முட்டி மோதுகின்றன. தாயும் சேயுமாக வாழ்ந்த இரு அயல் நாடுகள் மேற்குலகின் சூழ்ச்சி வலையில் சிக்கியுள்ளன.

நேட்டோவின் ஆதிக்க ஆக்கிரமிப்பை முறியடிக்க ரஷ்யா தொடர்ந்து போராடி வருகிறது. ஆனால் இந்த போரில் உக்ரைன் பலிக்கடாவானது அநாவசியமானதே தேவையற்ற போரை எதிர்கொள்ள உக்ரைன் திராணியற்று தவிக்கிறது.



காலைக்கதிர் Kalaikkathir

# கிண்ணியா ஆற்று நீர் வீதிக்கு வருவதால் கரையோர மக்கள் பயணிப்பதில் சிக்கல்

(றிஸ்னாத்)

கடந்த காலங்களில் கிண்ணியா குட்டிக்கராச்சி பிரதேசத்தில் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இந்த வீதித்திட்டமானது சுமார் 300 மீற்றர் நீளமானதாகும் இவ்வீதியின் 200 மீற்றர் நீளத்திற்கு அரிப்புச்சுவர் அமைக்கப்பட்டபோதிலும் மீதி வீதியில் அரிப்புச்சுவர் அமைக்கப்படாமையால் இவ்வீதி ஆற்று நீரோடு அடித்துச்செல்லப்படுகின்றது.

இப்பாதையினால் சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பாதையினூடாக பாடசாலை மாணவர்கள்,வியாபாரிகள், அரச ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் எனப் பலர் பயணம் செய்வதில் பெரும் அசௌகரியங்களையும் சந்தித்து வருகின்றனர்.

குறித்த பாதைக்கு செலவு செய்த பணம் லட்சத்திற்கும் அதிகமாக இருக்கும் எனவும் இப்பாதையால் பயணிக்கும் மக்களின் அசௌகரியங்களை கருத்தில் கொண்டும்



மக்களின் நலன் கருதியும் உரிய அதிகாரிகள் இப்பாதையை புனர்நிர்மாணம் செய்து தர வேண்டும் என்பது பொது மக்களின் வேண்டுகோளாகும்.

# மூதூரில் வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி அன்பளிப்பு

(ஜிப்ரான்)

புனித ரமலான் மாதத்தை முன்னிட்டு வறிய குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) 10.30மணி அளவில் மூதூர் பிரதான வீதியில் அமைந்துள்ள மூதூர் விவாகப்பதிவு காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது ஜே. ஜே. அமைப்பின் ஸ்தாபக தலைவர் அல்-ஹாஜ் வ.ம. கானிப் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து அனர்த்த நலன்புரி சங்கத் தலைவர் முஹம்மது யூசுப் லாபீர், தலைமையில் நேற்று காலை இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக, கிண்ணியா பிரதேச செயலாளர் முஹம்மது கனியும் மற்றும் மூதூர் கத்திப்மார் சம்மேளனத்தின் தலைவர் முஹம்மது அனிபா நிஷார் மௌலவி மற்றும் அதன் செயலாளர் கச்சி முஹம்மது இஹ்ஸான் முஃதி(ஐ எச் ஆர்) அத்துடன் ஏனைய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.







மேலும் அனர்த்த நலன்புரி நிறுவனத்தின் ஊடாக வருட வருடம் வறிய குடும்பங்களை இனம்கண்டு அவர்களுக்கான இவ்வாறு உதவி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.


JOB VACANCY

1. Full Time Job

REQUIRED POSITIONS:

·Advertisement collector – 2

·Marketing Head – 1

·Receptionist – 2

SALARY - ON INTERVIEW.

2. மண்டதீவில் உள்ள சுற்றுலா தலம் ஒன்றிற்கு இரண்டு வேலையாள் தேவை

தங்கியிருந்து வேலை செய்வது விரும்பத்தக்கது.
சம்பளம் - நேர்காணலில், பேசி தீர்மானிக்கலாம்

SEND YOUR CV TO :

hr.goodgift@gmail.com

More Details

0775551442




# பரீட்சை நிலையத்திற்குள் கையடக்க தொலைபேசி கொண்டுசெல்லத் தடை

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை நாடளாவிய ரீதியில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதன்படி, 2024 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையில் 4,74,147 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 3,98,182 பரீட்சார்த்திகள் பாடசாலை விண்ணப்பதாரிகள் எனவும், 75,965 பரீட்சார்த்திகள் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சைக்காக நாடளாவிய ரீதியில் 3,663 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அனைத்து பரீட்சார்திகளும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவான வகையில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இரத்மலானை, தங்காலை, மாத்தறை மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளில் விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மெகசின் சிறைச்சாலை மற்றும் வட்டரக்க சுமேதா வித்தியாலயத்தில் சிறைக்கைதிகள் மற்றும் புனர்வாழ்வு பெற்றுவரும் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையிலும் பரீட்சை நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கையடக்க தொலைபேசிகள், ஸ்மார்ட் கடிகாரம் உள்ளிட்ட கையடக்க தொலைபேசிகளுடன் இணைக்கக்கூடிய அனைத்து உபகரணங்களைப் பரீட்சை நிலையத்திற்குள் கொண்டுசெல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் நேரம் தாழ்த்தி பரீட்சை நிலையத்திற்குச் செல்லும் நிலைமையினை கடந்த காலங்களில் காணமுடிந்தது.

எனவே, இந்த நிலைமையினை தவிர்த்து அனைத்து பரீட்சார்த்திகளும் உரிய நேரத்திற்குப் பரீட்சை நிலையத்திற்குச் செல்லுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர வலியுறுத்தியுள்ளார்.

# இடர் பதிலிறுத்தல் குழு பயிற்சிச் செயலமர்வு

(றிஸ்னாத்)

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் அனுசரணையுடன் திருகோணமலை மாவட்ட அனர்த்த பதிலிருத்தல் குழு பயிற்சி செயலமர்வு திருகோணமலையில் இடம்பெற்றது.

கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை எஹெட் கரிதாஸ் கேட்போர் கூடத்தில் இந்தப் பயிற்சி இடம்பெற்றது.

மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 25 செஞ்சிலுவை தொண்டர்களுக்கு பயிற்சிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் வளவாளர்களாக தலைமை செயலகத்தைச் சேர்ந்த வீ.பிரேம குமார், தமித சாணக்க ஆகியோருடன் கிளைத் தலைவர் அன்டன் புனித நாயகம் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன் போது கிளை நிறைவேற்று குழு உறுப்பினர் த. கரிகாலன் அவர்களுடன் கிளை நிறைவேற்று அதிகாரி திருமதி எப்சிபா லோரன்ஸ் அவர்களும் குடும்பங்களை மீளிணைத்தல் இணைப்பாளர் டொக்டர் ரவிச்சந்திரனும் கலந்து சிறப்பித்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாணத்தில் தீவிரவாதக் குழுக்கள் சர்வதேசத்தைத் திசைதிருப்பும் முயற்சியா?

## மு.கா.தலைவர் ஹக்கீம் சந்தேகம்



கிழக்குமாகாணத்துக்குசித்திரிக்கப் பட்டிருக்கும்தீவிரவாதகுழுக்கள்என்ற செய்திஅரசாங்கம்பொதுமக்களையும் சர்வதேச சமூகத்தையும் திசை திருப்புவதற்காக செய்யப்படும் ஒரு நடவடிக்கையாவென தோன்றுகிறது. அதனால்அரசாங்கத்துக்கு விசாரணை செய்ய வேண்டும் என்றிருந்தால் நேரடியாக விசாரணை செய்ய வேண்டும் அதனைவிடுத்து, தவறான செய்தியை சித்திரித்து ஒட்டுமொத்த சமூகத்தையும் அவமானப்படுத்தக் வேண்டாமெனகேட்டுக்கொள்கிறேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற 2025 வரவு செலவுத்திட்டத்தின் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடிப்படையாக்கொண்டு அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் தீவிரவாத எண்ணக்கருவை உருவாக்கி இருப்பது கவலைக்குரிய விடயமாகும். சில அச்சு மற்றும் டிஜிற்றல் ஊடகங்கள் கடந்த 10 நாள்களாக நாட்டுக்குள் ஒரு பதற்றமான சூழலை ஏற்படுத்துவதற்காக செயற்பட்டு வந்தன.

கல்முனையில் முஸ்லிம் இளைஞர்களை பயங்கரவாதிகளாக சித்திரித்து காட்டியிருந்தார்கள். அவர்களை அடிப்படைவாதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் சித்திரிக்கின்றார்கள்.

கல்முனை மக்கள் அமைதியை விரும்புகிறார்கள். சாய்ந்தமருதில்தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருந்தது.அந்த மக்கள்தான் அது தொடர்பான தகவல்களை வழங்கி இருந்தார்கள். அந்த மக்கள் ஒத்துழைப்பு வழங்கக்கூடியவர்கள்.

இது சமூகத்துக்கு அச்சுறுத்தலாக இருந்தால்அது தொடர்பில்சட்ட நடவடிக்கை எடுங்கள். அவ்வாறு இல்லாமல் அதனை ஊடகங்களுக்கு தெரிவித்து ஒட்டுமொத்த மக்களையும் கஷ்டத்துக்கு உள்ளாக்காமல் அதற்கு நடவடிக்கை எடுங்கள்.

குறிப்பிட்ட நகருக்கு உண்மையில் சமய ரீதியில் தீவிரவாத கருத்துக்கள் இருந்தால், அந்த சமுதாயத்தில் உள்ள தலைவர்கள் அவருடன் சம்பந்தப்பட்டு அது குறித்து பார்க்க முடியும். அதைவிடுத்து அவரை ஒரு தீவிரவாதியாக அடையாளப்படுத்துவதும் பின்னர் தீவிரவாதியாக முடியும் என அடையாளப்படுத்துவதுவதானால் என்ன கிடைக்கப்போகிறது.

சுற்றுலா பயணிகள்தான் எமது நாட்டுக்கு வராமல் இருக்கப்போகிறார்கள். இது தேவையற்ற குழப்பம். முஸ்லிம் சமூகத்தின் தலைவன் என்றகையில் கூறிக்கொள்வது, அரசாங்கத்துக்கு விசாரணை செய்ய வேண்டும் என்றிருந்தால் நேரடியாக விசாரணை செய்யுங்கள். இதனை பொதுவாக ஊடகங்களில் தெரிவித்து தவறான செய்தியை சித்திரித்து ஒட்டுமொத்த சமூகத்தையும் அவமானப்படுத்தக் வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் தெரிவிக்கும் குழு தொடர்பில் எங்களுக்கு பல வருடங்களாகத் தெரியும். ஒவ்வொரு சமூகத்திலும் இவ்வாறான அடிப்படைவாத கருத்துக்கள் இருக்கத்தான் செய்கின்றன. எல்லா சமயத்தவர்களும் இப்படியான அடிப்படைவாத கருத்துக்களை கொண்டிருக்கிறார்கள். பாஸ்டர் ஒருவர் இருக்கிறார், அவர் ஏனைய சமயங்களை அவமானப்படுத்துகிறார்.

அதற்காகஉள்நாட்டில்உள்ளசட்டங்களைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுங்கள். அதனைவிடுத்து தேவையற்ற குழப்பத்தை நாட்டில் ஏற்படுத்த வேண்டாம். சிங்கள ஊடகங்கள் இதனை பாரதூரமான விடயமாக்கி கதைகளை சித்திரித்து வன்முறையை தூண்ட முயற்சிக்கிறார்கள். வெறுப்புணர்வை உருவாக்கப்பாக்கிறார்கள். எனவே இவை அனைத்தும் தடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் தேசிய பாதுகாப்பில் சட்டம் ஒழுங்கைதவறவிட்டுள்ளது. அதனால்சட்டம் ஒழுங்கைபாதுகாப்பதில்அவர்கள்மக்களுக்கு உறுதியளிக்க வேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

பொது மக்களையும் சர்வதேசசமூகத்தையும் திசை திருப்புவதற்காக செய்யப்படும் ஒரு விடயம்தானா கிழக்கு மாகாணத்துக்கு சித்திரிக்கப்பட்டிருக்கும் இந்த செய்தி என கேட்கிறோம். நாட்டில் அமைதியை குழப்புவதற்கான ஒரே மாதிரியான விடயத்தைத்தான் அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

அதனால் அரசாங்கம் இதற்காக அணைத்துக்கும்சாட்சியங்களைநிலைநிறுத்தி அதனை உறுதிப்படுத்த வேண்டும். இவர்கள் தீவிரவாதிகள் என சாத்தியப்படுத்துவதற்கு சாட்சியங்கள் தேவை. ஒரு பாராளுமன்ற உறுப்பினர்கூட தீவிரவாதம் அடிப்படைவாதம் தொடர்பில் பேசுகிறார். அது அவர்களின் சிறப்புரிமை. ஆனால் வெளியில் இதைப்பற்றி பேசினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

எனவே கல்முனை சம்பவம் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்க அந்த மக்கள் தயாரக இருக்கிறார்கள். அதனால் அது தொடர்பான விசாரணைகள் வெளிப்படையாக இருக்கவேண்டும்.-என்றார்.

# திருகோணமலைத் தமிழ்ச் சங்கத்தின் புதிய தலைவராக திருமலை நவம் தெரிவு

திருகோணமலைப் பொது நூலக கேட்போர்கூடத்தில் திருகோணமலை தமிழ்ச் சங்கத்திற்கான புதிய செயற்குழு சனிக்கிழமை தெரிவு செய்யப்பட்டது.

சுமார் பத்து ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த திருக்கோணமலைத் தமிழ்ச் சங்கம் கேணிப்பித்தன் (அருளானந்தம்) ஐயாவின் மூலம் மீள உயிர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தலைவராக திருமலை நவம் (மேனாள் பள்ளி முதல்வர்), செயலாளராக சி. காண்டீபன் (பள்ளி ஆசிரியர்), பொருளாளராக மு.மு.மு. முகைஸ் (பள்ளி முதல்வர்) தெரிவு செய்யப்பட்டனர்.

துணை தலைவராக கவிஞர் க. யோகானந்தம், துணை செயலாளராக கவிஞர் தி. பவித்திரன் , உறுப்பினர்களாக அதிபர் சுஜந்தினி யுவராஜா, ஆசிரியர் அ. ரவீந்திரன், எழுத்தாளர் கதிர், திருச்செல்வம், கவிஞர் எஸ். ஆர். தனபாலசிங்கம், கவிஞர் எஸ். சிவசங்கரன், ஊடகவியலாளர் அ. அச்சுதன், சமூக செயற்பாட்டாளர் வு. கோபகன், ஆசிரியர் மர்ளியா சக்காப், நூலகர் ந. யோகேஸ்வரன், எழுத்தாளர் அருஷா ஜெயராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ்ச்சங்கத்தின் இளைஞர் அணியும் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







## பட்டலந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் உறுதிப்பாட்டைப் பேணுவதற்கும் பொருளாதாரத்தை மீளகட்டியெழுப்புவதற்கும் நாட்டில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் நடவடிக்கைகளை எடுத்தது.

1994இன் பின்னர் ஜனாதிபதி சந்திகா குமாரதுங்க பந்தலந்த பகுதியில் காணப்பட்ட சித்திரவதை முகாம் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஆணைக்குழுவை நியமித்தவேளை, பல தனிநபர்கள் ஆணைக்குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டனர். நானும் சாட்சியாக அழைக்கப்பட்டேன். அவ்வேளை நான் எதிர்கட்சித் தலைவராக இருந்தேன்.

அரசியல்நோக்கங்களிற்காகவே பட்டலந்த ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அந்த நோக்கம் வெற்றியளிக்கவில்லை.

வீடுகளைவழங்கும்பணியைபொலிஸ்மா அதிபர்ஊடாகவேமுன்னெடுத்திருக்கவேண்டும் நான் அப்படி வழங்காதது குறித்தே என் மீது குற்றம்சுமத்தப்பட்டதாக ஆணைக்குழு என்னிடம் தெரிவித்தது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்துறை பிரதேச சபைக்கு ஐந்து தரப்புகளும்,நெடுந்தீவு பிரதேச சபைக்கு ஐந்து தரப்புகளும்,வேலணை பிரதேச சபைக்கு எழு தரப்புகளும், வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு எழு தரப்புகளும், வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு எழு தரப்புகளும், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கு எழு தரப்புகளும்,வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு எட்டு தரப்புகளும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு எட்டு தரப்புகளும், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கு எட்டு தரப்புகளும், பருத்தித்துறை பிரதேச சபைக்கு ஒன்பது தரப்புகளும், சாவகச்சேரி பிரதேச சபைக்கு எழு தரப்புகளும், நல்லூர் பிரதேச சபைக்கு ஆறு தரப்புகளும் என அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய ஐந்து அரசியல் கட்சிகளும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

தமிழ் மக்கள் கூட்டணி இதுவரை 14 உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட கட்டுப்பணத்தை செலுத்தியதுடன் வல்வெட்டித்துறை பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேச சபை, ஊர்காவற்துறை பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி சபைகளில் அது போட்டியிடவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி எட்டு உள்ளூராட்சி சபைகளிலும் ஷ்ரீலங்கா பொது ஜன பெரமுன நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிட கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபையில் போட்டியிட தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியும் காரைநகர் பிரதேச சபையில் போட்டியிட சோசலிச சமத்துவக் கட்சியும் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன.

## மற்றைய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் தலைவர் சிவஞானம் நேற்றுக் கிளிநொச்சியில் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் தமிழ் அரசுக் கட்சி போட்டியிடுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார் அவர். மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசுக் கட்சி இந்தத் தேர்தலில் தனித்தே போட்டியிடுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகித்த ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோதும் அதற்கு அந்தக் கட்சிகள் ஒத்துவராத காரணத்தால் தனித்தே போட்டியிடுகின்றோம்.

தேர்தல் நிறைவடைந்ததும் ஆட்சியமைகும் சூழல் ஏற்படும்போது தமிழ்த் தேசியத்துடன் பயணிக்கும் கட்சிகளுடன் இணையவேண்டிய தேவை ஏற்பட்டால், அதற்காகவும் முழு மனதுடன் மு-யற்சிகளை மேற்கொள்வோம். இந்தத் தேர்தலில் தென்னிலங்கையை தலைமையகமாகக் கொண்ட கட்சிகளுக்கு வாக்களிப்பதை மக்கள் தவிர்க்கவேண்டும் - என்றார்.

## அப்பாவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மிகப் பழையதாகும். 1994ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆளும்தரப்பில் ஜே.வி.பி. அமைச்சரவையில் அங்கத்துவம் வகித்தது. 2005 இல் மஹிந்த ராஜபக்சவை ஜனாதிபதியாக்குவதற்கு இவர்களே பிரதானமாக செயற்பட்டனர். அந்த காலங்களில் ஏன் இந்த அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவில்லை என்பது சந்தேகத்துக்குரியது.

தற்போதைய காலத்தின் தேவை ஜே.வி.பி.னரால் செய்யப்பட்ட கொலைகள் தொடர்பில் ஆராய்வதற்கான ஆணைக்குழுவொன்றை நியமிப்பதாகும். பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை முன்னிலைப்படுத்தி கடந்த காலங்களில் ஜே.வி.பி. செய்த கொலைகளை மறைப்பதற்கு இடமளிக்கக்கூடாது. பட்டலந்தையில் குற்றமிழைத்தோருக்கு தண்டனை வழங்கப்படும் அதேவேளை, ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை கொன்று குவித்த ஜே.வி.பியினருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆட்சி நியாயமாக செயற்படுகின்றது என்றால், இது தொடர்பில் புதியதொரு ஆணைக்குழு அமைக்கப்படவேண்டும். ஆயிரக்கணக்கானோர் அந்தக் குழுவில் சாட்சியமளிப்பர் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# நோன்புக் காலத்தில் உணவுப் பாதுகாப்பு நடவடிக்கை சம்மாந்துறையில் அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான்)

நோன்பு கால உணவுப் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகளை சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைய பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற பல்வேறு முறைப்பாட்டிற்கமைய உணவுப்பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில்கல்முனைபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சஹீலா இஸ்ஸதீன் ஆலோசனைக்கமைய சம்மாந்துறை சுகாதாரவைத்திய அதிகாரி வழிகாட்டலில் சென்ற மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.எம். பைலான் தலைமையிலான சுகாதார குழுவினர் இச்சோதனையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





இதன் போது பழக் கடைகள், பலசரக்குக் கடைகள், நோன்பு திறப்பதற்கான (இப்தார்) சிற்றுண்டி விற்பனை நிலையங்கள், வெளிநாட்டு இனிப்புப் பண்டங்கள் விற்பனை நிலையங்கள், என 13 உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள் பரிசோதனை செய்யப்பட்டன.

இதன் போது காலாவதியான பொருள்கள் சுட்டுத்துண்டு இல்லாத பொதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் பாவித்த சமையல் எண்ணெய் என்பன கைப்பற்றப்பட்டதுடன் சட்ட நடவடிக்கைக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# 5 வருடங்களாகத் தேடப்பட்டவர் சம்மாந்துறை பொலிஸால் கைது

(றில்சாத் பர்வீஸ்)

5 வருடங்களாக அக்கரைப்பற்று பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாரால் 2020 ஆண்டு முதல் கடந்த 5 வருடங்களாக திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குறித்த சந்தேக நபர் திறந்த பிடியாணை மூலம் தேடப்பட்டு வந்துள்ளார்.

திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள சந்தேக நபர் சம்மாந்துறை பிரதேசத்தில் நடமாடுவதாக சம்மாந்துறை பொலிஸ் விசேட புலனாய்வு அதிகாரிகளால் சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்கவின் பணிப்புரைக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் அறிவுறுத்தலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான சார்ஜன் ஐ.எல்.எம்.இஸ்மாயில், பொலிஸ் உத்தியோகத்தர் எம்.நிரஞ்சன் உள்ளிட்ட குழுவினர் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையை தொடர்ந்து குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை இரவு சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியில் பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகளினால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அக்கரைப்பற்றை சேர்ந்த 46 வயதுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்லடி பாலத்திற்கு அருகில் விபத்து

## மௌலவி ஒருவர் சாவு

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில் மௌலவி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றையதினம் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான காத்தான்குடி முகைதீன் பள்ளிவாசல் மௌலவி எம்.எஸ்.எம். ஸபீர் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கல்முனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த அரச போக்குவரத்து பஸ் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பின்பகுதியில் இருந்து பயணித்த மௌலவி உயிரிழந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# திருடப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மீட்பு

## மன்னாரில் மூவர் கைது

மன்னார் பொலிஸ் பிரிவிகுட்பட்ட சாந்திபுரம் பகுதியில் கடந்த சிவராத்திரி தினத்தன்று இரவு திருடப்பட்ட பல லட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் சனிக்கிழமை கைப்பற்றியுள்ளதுடன், திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் -

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த சிவராத்திரி தினத்தன்று பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டிருந்தன.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட விசாரணையின் போது மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து சுமார் 28 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர்கள் மன்னார் சாந்திபுரம் மற்றும் பனங்கட்டுகொட்டு பகுதியை சேர்ந்த 28,29 மற்றும் 33 வயதுடையவர்கள் ஆவர்.





கைது செய்யப்பட்ட மூவரும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் மூவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுப்போர் பொலிஸாருடன் நட்பு

## இது ஆபத்தான நிலை என வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுப்பவர்கள் பொலிஸாருடன் நட்பாக இருப்பதால், பொலிஸாரிடம் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு மக்கள் அஞ்சுகின்றனர். இது ஆபத்தான நிலைமை என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா, கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி பயிற்சி நிலையத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை அறக்கட்டளையின் தலைவரும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளருமான வைத்தியர் த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர், அறக்கட்டளையின் 15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உருவாக்கப்பட்ட மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில் -

2003ஆம் ஆண்டிலிருந்து இறுதிப்போர் வரையில் இந்த மாவட்டத்தில் மேலதிக மாவட்டச் செயலராகவும், மாவட்டச் செயலராகவும் பணியாற்றியிருக்கின்றேன்.

2008ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அளவில் எம்மை கிளிநொச்சி நகரிலிருந்து வெளியேறுமாறு இராணுவ அதிகாரிகள் அறிவுறுத்தினர். அதன் பின்னர் நாம் இங்கிருந்து இடம்பெயர்ந்து தருமபுரம் விளையாட்டு மைதானத்தில் ஓலைக்கொட்டில் அமைத்து அங்கிருந்து மாவட்ட செயலகத்தை இயக்கினோம்.

அப்போதும் இரவு நேரத்தில் இந்த மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்கான செயற்பாடுகள் தொடர்பில் இங்குள்ள பலருடனும் கலந்துரையாடியிருக்கின்றேன்.

இறுதிப்போர் முடிந்து இங்கு மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் எல்லாவற்றையும் இழந்த நிலையில் இருந்த அவர்களுக்கு கல்வியைப் பெற்றுக்கொள்வது பெரும் சிரமமாக இருந்தது.

அந்த நேரத்தில் மக்களுக்கு இந்த அறக்கட்டளை கைகொடுத்தது. 2010ஆம் ஆண்டு நான் முல்லைத்தீவு மாவட்ட செயலராகப் பதவியேற்றேன். அங்கும் இந்த மாதிரியான நிலைமையே இருந்தது.

பல்கலைக்கழக அனுமதி கிடைத்த பலர், கல்வியைத் தொடர முடியாதளவுக்கு அவர்களின் வறுமைச் சூழல் இருந்தது. அதனால் பலர் பல்கலைக்கழக கல்வியைத் தொலைக்கவேண்டியிருந்தது.

முல்லைத்தீவில் கல்வி நிதியம் ஒன்றை ஆரம்பித்தாலும், அங்கு இருந்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. அவ்வாறான சூழலில், இந்த அறக்கட்டளையின் தலைவராக இருக்கின்ற வைத்தியர் சத்தியமூர்த்தியுடன் இருந்த தொடர்பு காரணமாக, முல்லைத்தீவைச் சேர்ந்த மாணவர்களுக்கும் உங்களின் அறக்கட்டளை ஊடான உதவிகளைப் பெற்றுக்கொடுத்திருக்கின்றேன்.

இந்த உதவிகள் தொடரவேண்டும். வெளிநாட்டிலிருப்பவர்கள் தொடர்ந்து எமக்கு நிதி வழங்கிக்கொண்டிருக்க முடியாது. இன்று உதவிகளைப் பெற்று உயர் நிலையை அடையும் ஒவ்வொவரும் தாமும் உதவிகளைச் செய்து மற்றையவர்களை வளர்த்து விட வேண்டும். அதன் மூலம்தான் இந்த அறக்கட்டளை தொடர்ச்சியாகச் செயற்படக் கூடியதாக இருக்கும். அந்தப் பொறிமுறையை பின்பற்றுகின்றார் என நம்புகின்றேன்.

அன்றைய போர்ச் சூழலிலும் கல்விக்கான வசதிகள் உள்ளிட்ட சகல சேவைகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன. வளங்கள் குறைவாக இருந்தாலும் மக்களின் தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்தோம். இன்று வளங்களும், தொடர்பாடலும் பெருகிவிட்டாலும் மக்களுக்கான சேவைகள் என்பது அருகிவிட்டது.

அன்றைய எமது சேவைகளுக்கும் இன்றைய காலத்துச் சேவைகளுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. இன்று பொதுமகன் அரசதிணைக்களத்துக்குச் சென்றால் அரசாங்க அதிகாரிகள் பந்தடிப்பதுபோன்று அலைக்கழிக்கின்றனர். அல்லது இழுத்தடிக்கின்றனர்.

போர்க்காலத்தில் பணியாற்றியவர்கள் மக்களுக்குச் சேவை செய்யும் நோக்குடன் பணியாற்றினார்கள். இன்று அப்படியல்ல.

கடந்த காலங்களில் அரசியலுக்காக ஒரு சில அரசாங்கத் தொழில்கள் உருவாக்கப்பட்டன. தொழிலுக்காக சம்பளம் வழங்கவில்லை. சம்பளம் வழங்கவேண்டும் என்பதற்காக அரசாங்கத் தொழில்கள் உருவாக்கப்பட்டன. இதனால் உருவாகிய அரசாங்க அதிகாரிகள் பலர் தங்கள் சேவைகளை வினைத்திறனுடன் முன்னெடுக்கின்றார்கள் இல்லை.

ஏழையைக் கண்டால் உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் இயல்பாக மனதில் எழவேண்டும். அப்படிச் சிந்திப்பவர்கள் இன்று குறைவு. ஏழைக்குச் செய்யும் சேவையும், பிரதிபலனை எதிர்பார்க்காமல் செய்யும் சேவையும்தான் மிகப்பெரிய சேவை, என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரனும் கலந்துகொண்டார். அறக்கட்டளையின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியவர்கள் இந்த நிகழ்வில் ஆளுநரால் கௌரவிக்கப்பட்டனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியாவின் 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கட்டுப்பணம் செலுத்திய ஐக்கிய மக்கள் சக்தி

வவுனியா மாவட்டத்தின் 5 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிட ஐக்கிய மக்கள் சக்தி சனிக்கிழமை வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஐக்கிய மக்கள் சக்தி ரெலிபோன் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

அதற்கானகட்டுப்பணத்தைஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதி தவிசாளருமான முத்து முகமது, முன்னாள் நகர சபை உறுப்பினர்களான அப்துல் பாரி, லரீப், ஐக்கிய மக்கள் சக்தியின் மாவட்ட அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சினி உள்ளடங்கிய கட்சி முக்கியஸ்தர்கள் கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தனர். 100



# மட்டக்களப்பில் மீண்டும் மழை; போக்குவரத்துக் கடும் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மழை பெய்து வருவதன் காரணமாக தாழ்நில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த மழை காரணமாக வாழச்சேனை, கிரான், செங்கலடி, வெல்லாவெளி, போன்ற தாழ்நில பகுதிகளில் மழைநீர் காணப்பட்ட போதிலும் நேற்று பெய்த மழை காரணமாக தாழ்நில பிரதேசங்களில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கிரான், வாகரை, செங்கலடி, போன்ற பகுதிகளில் மக்கள் போக்குவரத்து செய்யும் பிரதான பாதைகள் ஊடாக வெள்ள நீர் தேங்கி காணப்படுவதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கிரான் பகுதியில் கோரகல்லிமடு, புலிபாய்ந்தகல், போன்றபகுதிகளைச்சேர்ந்த அங்குள்ள மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் போக்குவரத்துக்கள் தடைபட்டுள்ளன.

இப்பகுதி இராணுவத்தினின் உதவியுடன் பிரதேச செயலகத்தால் படகுச் சேவைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில், பல ஏக்கர் காணிகளில் தற்போது சிறு போக வேளாண்மை செய்கை ஆரம்பக்கட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருவதால் இப்பகுதியில் செல்லும் விவசாயிகள், பொதுமக்கள், நோயாளிகள் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, படுவாங்கரைப் பகுதியில் சிறு போக வேளாண்மை செய்கைக்கு தயாராகி இருந்த



நெற் காணிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் விவசாயிகள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# கணித, விஞ்ஞான துறையில் தமிழ் மாணவர் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றது

## யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் வேதனை

கணித, விஞ்ஞானதுறையில்தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கிறது என யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியல் துறைப் பேராசிரியர் க.சசிகேஷ் தெரிவித்தார்.

சட்டத்தரணி செல்வஸ்கந்தனால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட மகாஜனன் கணித விஞ்ஞான திறன்காண் போட்டிப்பரீட்சையில் வெற்றியீட்டியமாணவர்களுக்கானபரிசில்வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பாவலர் துரையப்பாப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கணித, விஞ்ஞானதுறையில்தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கிறது. இது கவலையான விடயமாக உள்ளது. கணித, விஞ்ஞான துறையில் மாணவர்கள் தெரிவு செய்வது குறைவதாக குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகிறது. சில தவறான கண்ணோட்டமோ தவறான புரிதலோ என்பது புரியாதுள்ளது.

கணிதவிஞ்ஞானதுறைகளைவிட கலைத்துறையில் வேலைகளை பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலையும் காணப்படுகிறது. ஆனால் கணித, விஞ்ஞான துறையில் வேலை இல்லை என்று கூறுவதற்கில்லை.

படித்து முடிந்த கையோடு ஆக குறைந்தது. ஒரு வருடம் காத்திருக்க வேண்டிவரும் அதற்குள் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வேலை கிடைத்துவிடும் அல்லது மேற்படிப்புக்கு செல்லலாம்.

கணித, விஞ்ஞான துறைக்கு தற்போதும் ஆசிரியர்கள் பற்றாகுறையாகவே உள்ளது. மாணவர்களை பெற்றோர், ஆசிரியர்கள் சரியான முறையில்தெளிவுபடுத்தல்களை,தயார்படுத்தல்களை செய்தால் அந்த துறையில் மாணவர்களை முன்னேற்றமடைய செய்யலாம்.

ஏனைய துறையைப்போல் வேலையில்லா போராட்டம் வேலையில்லா பிரச்சினைக்குள் சிக்குப் படதேவையில்லை என்பது எனது கருத்தாகும்.

கணித விஞ்ஞான துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்தே சட்டத்தரணி இ. செல்வஸ்கந்தனால் மாகாண மட்டத்தில் மகாஜனன் கணித விஞ்ஞான திறன்காண் போட்டிப்பரீட்சையை நீண்டகாலமாக நடத்திவருகிறார். அரசாங்கமும் இந்த துறையை ஊக்கப்படுத்திவருகிறது.

தற்போது இப்போட்டியில் பலமாணவர்கள் பங்குபற்றிவருகிறார்கள்என்பதுபாராட்டுதலுக்குரியது. இது தொடரவேண்டும். இதேவேளை பல்கலைக்கழகங்களூடாகவோ அல்லது வேறு நிறுவனங்களூடாகவோ புத்தாக்க போட்டிகள் இடம்பெற்றுவருகின்றன. அவற்றிலும் மாணவர்களை ஊக்கத்தோடு பங்குபற்றவைக்க வேண்டும்.

சில புத்தாக்க போட்டிகளில் ஒரு சில பாடசாலைகளே பங்குபற்றுகின்றன கிரமங்களில் உள்ள பாடசாலைகள் இத்தகைய போட்டிகளில் பங்குபற்றுவது குறைவாகவுள்ளது. குறிப்பாக தேசிய ரீதியில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றுவது குறைவாகவுள்ளது.

இத்தகைய போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தடைகள் காணப்பட்டால் ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொண்டு அவற்றை சீர்செய்து கொள்ளலாம்.

தற்போதைய சூழலில் குறிப்பாக 2009 ஆண்டு யுத்தத்திற்கு பின்னரான சூழலில் யாழ்.பல்கலைக்கழகத்தில்கணிதவிஞ்ஞானதுறையில் 65 வீதமான மாணவர்கள் தென்னிலங்கையை சேர்ந்த மாணவர்களே கல்வி கற்கிறார்கள். தமிழ் மாணவர்களின் வீதம் குறைந்துகொண்டு செல்கிறது. - என்றார்.

# உப்புவெளி கமநல சேவைகள் நிலையத்தின் இப்தார் நிகழ்வு

(முபீன், அபு அலா)

திருகோணமலை - உப்புவெளி கமநல சேவைகள் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு உப்புவெளி கமநல சேவைகள் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் துதர்சானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த இப்தார் நிகழ்வுக்கு சிறப்புவிருந்தினராககமநல சேவைகள் குழுத்தலைவர் சி.சிவராசா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் கப்பல்துறை கமக்கார அமைப்பு, முத்துநகர் கமக்கார அமைப்பு, தகரவெட்டுவான் கமக்கார அமைப்பு, மத்தியவெளி கமக்கார அமைப்பு, ஆண்டாங்குளம் கமக்கார போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.03.2025இல் வெளியிடப்பெற்றது